MINISTRY OF HEALTH
SINGAPORE




# மெடிஃபண்ட் என் மகளின் உயிரைக் காப்பாற்றியது

### குமாரி ஹுவாங்கின் கட்டணம்

| | |
|---|---|
| மொத்த கட்டணம் | $52,016.86 |
| மருத்துவமனையில் தங்கிய நாட்கள் | 79 நாட்கள் |
| அரசாங்கத் தள்ளுபடி (80%) | $42,018.48 |
| தள்ளுபடிக்குப் பிறகு மொத்த கட்டணம் | $9,998.38 |
| மெடிஃபண்ட் கட்டிய தொகை (100%) | $9,998.38 |
| நோயாளி ரொக்கமாகக் கட்டிய தொகையின் விகிதம்: | 0 % |

**பணமின்றி வாழ்க்கையை ஓட்டப் போராடும் ஒரு தாய்க்கு, அவரது மகளின் நீண்டகால மருத்துவக் கட்டணங்களைக் கட்டி மெடிஃபண்ட் உதவியது.**

குமாரி ஹுவாங் லீஜனுக்கு 13 வயதுதான். அந்த இள வயதில் அடிக்கடி தலைசுற்றல், கடுமையான சோர்வு, பசியின்மை ஆகியவை அவரைப் பாதித்து அவரது வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டன.

லூபஸ் (systemic lupus erythematosus) என சுருக்கமாக அழைக்கப்படும் நோயால் பாதிக்கப்பட்ட இந்தப் பதின்ம வயதினரின் எதிர்ப்புச்சக்தி அவரது உடலின் அணுக்களையும் திசுக்களையும் தாக்கிக் கொண்டிருந்தன. அடிக்கடி நோயுற்ற அவர் சிறுநீர் நோய்த்தொற்றலாலும் அவதிப்பட்டார். அவரைப் பீடித்த நோயால் உடலளவில் அவர் நலிவடைந்தார்.

இந்நிலையில் “transverse myelitis” எனப்படும் உடல்நலப் பிரச்னையால் அவரது முதுகுத்தண்டுவடம் வீங்கி அவரது நிலைமையை இன்னும் மோசமாக்கியது. முதலில் கழிகளை ஊன்றி நடந்தவர், இப்போது சக்கர நாற்காலியில் நடமாடுகிறார்.

வேறு வழியில்லாமல், உயர்நிலை 4ம் வகுப்பில் படிப்பை நிறுத்தினார்.

இப்போது 20 வயதாகும் குமாரி ஹுவாங், மற்ற பதின்ம வயதினர் பள்ளிக்குச் செல்வதைப் போல கடந்த ஏழு ஆண்டுகளாக டான் டோக் செங் மருத்துவமனைக்கு வாடிக்கையாகச் சிகிச்சைக்குச் செல்கிறார்.

“அவளுக்கு எப்போதும் நோய்க்கிருமி தொற்றி மருத்துவமனைக்குச் செல்ல நேரிடுகிறது. தீவிர சிகிச்சைப் பிரிவிலும் பலமுறை தங்கியிருக்கிறார்,” என மண்டரின் மொழியில் கூறினார் அவரது தாயார் திருவாட்டி ஃபூ ச்சூ, வயது 54.

தொடர்ந்து வந்து கொண்டே இருந்த மருத்துவக் கட்டணங்களின் சுமை பெரிது.

மருத்துவமனையில் தங்குவது முதல் மருந்துகள் வரையிலான செலவுகளோடு, இவரால் நடக்க முடியாததால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அம்புலன்ஸ் வண்டியை அழைக்கும் செலவுகளும் சேர்ந்து குமாரி ஹுவாங்கின் மருத்துவக் கட்டணம் பெருகிக் கொண்டே போனது. தெம்பனிஸில் ஐந்தாவது மாடியில் இருக்கும் தங்களது மூன்றறை வீட்டிற்கு இவரை மேலும் கீழும் தூக்கிச் செல்ல இவரது தாய்க்கும் வலுவில்லை.

தனது மருத்துவப் பிரச்னையால் வேலை செய்ய இயலாத குமாரி ஹுவாங்குக்கு மெடிசேவ் சேமிப்பு கிடையாது. இவருக்கு லூபஸ் நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்ட சமயத்தில் இவரது தந்தை இதய நோயால் மரணமடைந்தார். இவரது இரு மூத்த சகோதரிகளையும் ஆதரிக்கும் இவரது தாயார், இவரைக் கவனிப்பதற்காக உணவு அங்காடிக்கடையில் செய்துவந்த உதவியாளர் வேலையை ராஜினாமா செய்தார்.

கடந்துவந்த ஆண்டுகளில் திருவாட்டி ஃபூ சேமித்த மெடிசேவ் சேமிப்புகள் அனைத்தும் மகளின் சிகிச்சைகளுக்காக விரைவில் தீர்ந்துபோயின.

நல்லவேளையாக, வசதியில்லாத நோயாளிகளுக்கு மெடிஃபண்ட் வடிவில் உதவி கிடைக்கிறது. தங்களது மருத்துவக் கட்டணங்களைக் கட்டுவதில் உண்மையாகவே சிரமங்களை எதிர்நோக்கும் சிங்கப்பூரர்களுக்குப் பாதுகாப்பு வலையாகத் திகழும் மெடிஃபண்ட், எவருக்கும் மருத்துவச் சிகிச்சை மறுக்கப்படாதிருப்பதை உறுதி செய்கிறது.

திருவாட்டி ஃபூ கூறியதாவது: “எங்களிடம் பணமே இல்லை. அன்றாட வாழ்க்கையை ஓட்ட, சமூக மேம்பாட்டு மன்றங்கள் தரும் பண உதவியை நம்பியிருக்கிறோம். மெடிஃபண்ட் உதவி கிடைக்காவிட்டால், லீஜன் மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்க நேர்ந்திருக்கும். மருத்துவச் சிகிச்சைக்குச் செலவிட எங்களிடம் வசதியில்லை.”

சென்ற 2002ம் ஆண்டு முதல், குமாரி ஹுவாங்கின் மருத்துவக் கட்டணங்களைக் கட்ட மெடிஃபண்ட் உதவி வருகிறது.

அண்மையில், மூளையிலிருந்து திரவத்தை அகற்றுவதற்காக லீஜனுக்கு இரண்டு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. சென்ற ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரை டான் டோக் செங் மருத்துவமனையின் வகுப்பு C படுக்கைப்பிரிவில் அவர் தங்கியிருந்தார்.

அவரது மொத்த கட்டணம் $52,000. வகுப்பு C படுக்கைப்பிரிவின் தாராளமான தள்ளுபடிகளுடன் அவரது கட்டணம் சுமார் $10,000க்குக் குறைந்தபோதிலும், குமாரி ஹுவாங்கும் அவரது குடும்பத்தாரும் இதைக் கட்டும் சாத்தியம் இல்லை.

நல்லவேளையாக, தள்ளுபடிக்குப் பிறகு எஞ்சிய 100 % கட்டணத்தையும் மெடிஃபண்ட் கட்டியது.

“அரசாங்கத்தின் உதவி இல்லாமல் என் மகள் இன்று உயிருடன் இருந்திருக்க மாட்டார். மெடிஃபண்டுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்,” என்றார் திருவாட்டி ஃபூ.

இந்தச் சம்பவம் பற்றி குமாரி ஹுவாங்குக்கு அவ்வளவாக நினைவில்லை. ஆனால் இந்தப் போராட்டத்தின் தழும்புகளாக ஒரு காதில் செவிப்புலன் பாதிப்பும் ஒரு கண்ணில் பார்வை இழப்பும் நிலைக்கிறது.

“நான் கோமா மயக்கநிலையில் இருந்ததால் அதிகம் நினைவில்லாத போதிலும், இப்போது உடல்நிலை தேறியிருப்பதாகத் தோன்றுகிறது. எனக்கு வலிப்பும் வந்ததாகச் சொன்னார்கள்,” என மெல்லிய குரலில் சொன்னார் குமாரி ஹுவாங்.

“எனக்கு நினைவு திரும்பியபோது, என் மூளையிலிருந்து வயிற்றுக்குள் திரவத்தைச் செலுத்த இரண்டாவது அறுவை சிகிச்சை செய்து முடித்திருந்தார்கள். மெடிஃபண்ட் எனக்கு 100 விழுக்காடு உதவியது,” என்றார் அவர்.

குமாரி ஹுவாங் போன்ற நோயாளிகளுக்கு உதவிக்கரம் நீட்டும் மெடிஃபண்ட், மருத்துவமனை கட்டணங்களைப் பற்றிய கவலையைப் போக்குகிறது.

2007ம் ஆண்டு, வசதி குறைந்த நோயாளிகளுக்கு உதவியாக மருத்துவமனைகளுக்கும் தொண்டூழிய அறப்பணி அமைப்புகளுக்கும் அரசாங்கம் $50.3 மில்லியன் மெடிஃபண்ட் மானியத்தொகையை வழங்கியது.

இவ்வாண்டு, மெடிஃபண்ட் நிதியில் அரசாங்கம் மேலும் $200 மில்லியன் போட்டு, அதை $1.6 பில்லியனாக உயர்த்தியது. சென்ற 2006ம் ஆண்டு, மெடிஃபண்ட் உதவி நாடி விண்ணப்பம் செய்தவர்களில் சுமார் 98 விழுக்காட்டினருக்கு உதவி கிடைத்தது.

வசதியில்லாத சிங்கப்பூரர்கள் அனைத்து பொது மருத்துவமனைகளிலும் மருத்துவச் சமூக சேவையாளரின் மூலமாக மெடிஃபண்ட் நிதி உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

> அரசாங்கத்தின் உதவி இல்லாமல் என் மகள் இன்று உயிருடன் இருந்திருக்க மாட்டார். மெடிஃபண்டுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.
>
> - தனது மகள் ஹுவாங் லீஜனின் மருத்துவக் கட்டணங்களை மெடிஃபண்ட் மூலமாக அரசாங்கம் கட்டியது பற்றி திருவாட்டி ஃபூ ச்சூ இவ்வாறு சொன்னார்.



மேல்விவரங்களுக்கு, அன்புகூர்ந்து பார்க்கவும் www.moh.gov.sg